இனிமையான குழந்தைகளே! சேவை செய்வதில் ஆர்வம் வையுங்கள். விசால புத்தி உள்ளவராகி, சேவையின் பலவித யுக்திகளை உருவாக்குங்கள். அர்த்தமற்ற விஷயங்களைச் சரி செய்யுங்கள்.

கேள்வி: அஜாமில் போல் அசுத்தமாகி விட்டுள்ள ஆத்மாவைத் தூய்மைப் படுத்துவதற்கான சாதனம் என்ன?

பதில்: அந்த ஆத்மாவை ஞான மானசரோவரில் மூழ்கச் செய்யுங்கள். ஞானக்கடலில் மூழ்கி யிருந்தால் ஆத்மாவின் அழுக்கு நீங்கித் தூய்மையாகி விடும்.

கேள்வி: பிராமணர்களுக்கு அனைத்திலும் பெரிய பாவம் எது?

பதில்: பிராமணர்கள் தந்தையின் கட்டளையை ஏற்று நடக்கவில்லை என்றால் அது மிகப்பெரிய பாவ மாகும். தந்தையின் முதல் கட்டளை, நீங்கள் என்னை நிரந்தரமாக நினைவு செய்யுங்கள். ஆனால் குழந்தைகள் இதில் தான் ஃபெயிலாகி விடுகின்றனர். பிறகு மாயா ஏதாவதொரு விகர்மம் செய்ய வைத்து விடுகிறது.

பாடல்: ஆகாய சிம்மாசனத்தை விட்டு இறங்கி வாருங்கள்...........

ஓம் சாந்தி. குழந்தைகளின் புத்தியில் என்ன வருகிறது? யார் வந்துள்ளார்? (தந்தை, ஆசிரியர், சத்குரு) தாய்-தந்தை என்ற சொல்லோ அவசியம் வேண்டும். தாய்-தந்தை என்ற சொல் பாரதத்தில் பிரபல மானது. நீங்கள் தான் தாயும்-தந்தையும்....... அதன் பின் நீங்கள் சொல்ல முடியும்-- பாப்தாதா என்று. அது போல் தாய்-தந்தை என்பதில் பாப்தாதா வந்து விடுகிறார் -- ஆனால் அப்படி இல்லை, இது புரிய வைப்பதற்கான வழிமுறை. ஏனென்றால் தந்தை இருக்கிறார், தாயும் அவசியம் வேண்டும். இப்போது முதலில் தாய் யார்? இது ஆழத்திலும் மிக ஆழமான விசயம். இதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. பிரஜாபிதா பிரம்மா இருந்தாலும் கூட தாய் வேண்டுமா? பிரஜாபிதா பிரம்மாவுடன் கூட பிரஜாபத்தினியும் வேண்டுமா? இல்லை. பிரஜாபத்தினி வேண்டியதில்லை. ஏனென்றால் இது முகவம்சாவளி. அதனால் பிரம்மாவின் பத்தினி என்று யாரும் இருக்க முடியாது. இது மிகவும் ஆழமான மற்றும் இரகசியமான விசயங்கள். இதைப் புரிந்து கொள்ளவும் தாரணை செய்யவும் புத்தி வேண்டும். இந்த ஒரே ஒரு தந்தை தான் குழந்தைகளின் முன்பாக வருகிறார். நீங்களோ தாய்-தந்தையாகிய பாப்தாதா நம் முன்பாக வந்துள்ளனர் எனப் புரிந்து கொள்கிறீர்கள். குழந்தைகள் வெளியில் சேவை செய்கின்றனர், சென்டர்களில் யார் உள்ளனரோ, அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள், தாய்-தந்தை, பாப்தாதா நமக்கு முன்பாக முன்னால் வந்துள்ளனர் என்று. அவர்கள், இன்ன பி.கே. அல்லது பிரம்மாகுமாரி வந்துள்ளார் எனப் புரிந்து கொள்வார்கள். இந்த மம்மா, தத்தெடுக்கப் பட்டவர். அனைவரைக் காட்டிலும் அதிர்ஷ்ட நட்சத்திரம் ஜெகதம்பா ஆவார். அவர் பராமரிப்பதற்காக முக்கியமானவர். அதனால் இவர் மீது (ஞானத்தின்) கலசம் உள்ளது, மற்றும் இவரோ (பிரம்மா) பிரம்மபுத்திரா, ஆண் ரூபத்தில். ஆக, சரஸ்வதி நிச்சயமாக வேண்டும். சரஸ்வதி தான் ஜெகதம்பா எனச் சொல்லப்படுகிறார். இந்த ஆணை (பிரம்மா) ஜெகதம்பா எனச் சொல்ல மாட்டார்கள். இது மிக நல்ல ரகசியம். இது எந்த ஒரு கீதை அல்லது பாகவதத்திலும் கிடையாது. சாஸ்திரங்களில் கதைகளை உட்கார்ந்து எழுதியுள்ளனர். 5000 ஆண்டுகளுக்கு முன் அல்லது 2500

ஆண்டுகளுக்கு முன் என்ன நடந்தது என்பதை உட்கார்ந்து எழுதுகின்றனர். அந்தப் பெயர், வடிவம், தேசம், காலமோ எதுவும் இல்லை. நாடகமும் அநேக விதமாக எழுதுகின்றனர். இதை பாபா அமர்ந்து நம் முன் நேரடியாக நன்றாகப் புரிய வைக்கிறார், குழந்தைகளே, ஒவ்வொரு விசயத்தைப் பற்றியும் முழுமையாகப் புரிந்து கொள்ளுங்கள். இந்தப் பாடல்களிலும் கூட அநேக அர்த்தமற்ற சொற்கள் உள்ளன. இப்போது ஆகாய தத்துவமோ இது தான், இதில் நாம் அமர்ந்துள்ளோம். எந்தப் பரலௌகிகத் தந்தையை அனைவரும் நினைவு செய்கின்றனரோ, அவர் ஒன்றும் ஆகாய தத்துவத்தில் இருந்து வருவதில்லை. கிருஷ்ணரின் ஆத்மா என்று சொல்வோமானால் அவர் இங்கே தான் இருக்கிறார். மிக முக்கிய ஆத்மாக்கள், தர்ம ஸ்தாபகர் முதலிய அனைவரும் இங்கே தான் உள்ளனர். கிருஷ்ணரின் ஆத்மாவும் கூட 84-வது பிறவியில் இங்கே தான் உள்ளது. அவருடைய ஆத்மாவையோ அழைக்க முடியாது. பரமபிதா பரமாத்மா, உங்கள் நிர்வாண்தாமத்தை விட்டு அங்கிருந்து வாருங்கள் என அழைக்கப் படுகிறார். ஆத்மாக்களாகிய உங்கள் சிம்மாசனமோ மகதத்துவம் (பரந்தாமம்) தான். ஆகாயத்திலோ ஜீவாத்மாக்கள் நீங்கள் வசிக்கிறீர்கள். இது விளையாட்டு நடைபெறுவதற்கான உலக நாடக மேடை. பாடலைக் கேட்கிறீர்கள் என்றால் மனதிற்குள் நீங்களே அதைச் சரி செய்து கொண்டே செல்லுங்கள். யார் நாடகத்தை உருவாக்கியுள்ளனரோ, அவர்களே பாடலையும் இயற்றியுள்ளனர். திரைப்படம் எடுப்பவர்களுக்கும் சொல்லிப் புரிய வைக்க வேண்டும். இதில் மிகவும் விசாலபுத்தி வேண்டும். சேவை செய்வதற்காக பாபா அறிவுரை வழங்குகிறார். இந்த டிராமாவை யார் உருவாக்கியுள்ளனரோ, அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். அவர்களுடன் சந்திக்க வேண்டும். அந்தளவு புத்தி வேண்டும். பாபாவோ வழிகாட்டுவார் -- இப்படி-இப்படிச் செய்யுங்கள், ஸ்ரீமத் படி செல்லுங்கள் என்று. (பாடல்) உண்மையில் பூமி என்பது இந்த பாரதகண்டமாகும். பாரதத்தில் தான் அவர் வருகிறார். பாரதம் தான் அவரது பிறப்பிடம். அனைவரும் அந்த நிராகார் தந்தையைத் தான் அழைக்கின்றனர். கிருஷ்ணரோ அனைவரின் தந்தையல்ல. மேலும் அவர்கள் கிருஷ்ணரின் கையில் இருப்பதாகக் காட்டும் முரளி ஒன்றும் மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழலல்ல. முரளி என்பதோ உண்மையில் ஞானத்தினுடையதாகும்.

ஞானதேவி என்று சரஸ்வதியைச் சொல்கின்றனர். இராதையைச் சொல்ல மாட்டார்கள். கிருஷ்ணரையும் கூடச் சொல்ல மாட்டார்கள். இவர்களோ (பிரம்மா-சரஸ்வதி) தந்தை மற்றும் குழந்தையாகிய ஜோடி ஆவார்கள். சரஸ்வதி ஞானத்தின் தேவி எனச் சொல்லப்படுகிறார். ஆக, நிச்சயமாக பிரஜாபிதா பிரம்மா பிரம்மபுத்திராவும் கூட ஞானத்தின் தேவதாவாக வேண்டும். ஆனால் பிரம்மா பற்றி அது போல் பாடப் படுவதில்லை. கடவுள் ஞானம் நிறைந்தவர் எனச் சொல்லப் படுகிறார். பிரம்மா ஞானம் நிறைந்தவர் அல்ல. கடவுள் ஞானம் நிறைந்தவர். பரமபிதா பரமாத்மா ஞானக்கடல் என்றால் நிச்சயமாக தம்முடைய குழந்தைகளுக்கு ஞானம் கொடுப்பார். முதல்-முதலில் இவருக்குள் பிரவேசமாகி இவர் மூலமாக மற்றவர்களுக்குத் தருகிறார். இதில் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் அனைவரும் வந்து விடுகின்றனர். ஞான சூரியன், பிறகு ஞானச்சந்திரன் இவர் (பிரம்மா) ஆகிறார். பிறகு ஞானச் சந்திரனுக்கு அருகில் ஒரு நட்சத்திரம், அவர் சந்திரனுக்கு முன்னால் நின்று கொண்டுள்ளார். அவர் மிகவும் திறமை வாய்ந்தவர். அவரை ஞான அதிர்ஷ்ட நட்சத்திரம் எனச்

சொல்வார்கள். அவருடைய பெயர் சரஸ்வதி என வைக்கப் பட்டுள்ளது. சரஸ்வதி மகள் ஆகிறார் இல்லையா? இவரோ தந்தையும் ஆகிறார், பெரிய நதியும் ஆகிறார். மிகப்பெரிய நதி! அனைத்து நதிகளும் கடலில் சங்கமிக்கின்றன. கடல் மற்றும் நதிகளின் சங்கமமாகிய திருவிழா நடைபெறு கிறது. சரஸ்வதி கூட கடலில் சேர்கிறார். அவருக்குத் திருவிழா நடைபெறுவதில்லை. திருவிழா பிரம்மபுத்திரா நதிக்கு நடைபெறுகிறது. இந்த நதி அற்புதமானது, அவர் ஆண் ஆவார். பெண்ணுக்குத் தான் நதி என்று சொல்லப்படுகிறது. இந்த ஆழமான ரகசியம் மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஆனால் இந்த விசயங்களை முதல்-முதலிலேயே யாருக்கும் சொல்லக் கூடாது. முதலிலோ லௌகிக் தாய்-தந்தை பற்றிய இரகசியத்தைப் புரிய வைக்க வேண்டும். லௌகிக் தாய்-தந்தையிடமிருந்து அல்பகாலத்தின் சுகத்திற்கான ஆஸ்தி கிடைத்தே வந்துள்ளது. இதுவோ பக்காவாக நினைவிருக்க வேண்டும். வேறு யாராலும் இரண்டு தந்தையரின் ரகசியத்தைப் புரிய வைக்க முடியாது. அவர்களோ இது பற்றித் தெரிந்து கொள்ளவே இல்லை. பாடுகின்றனர் -- நீங்கள் தான் தாயும் தந்தையும்.... என்று. இப்போது தந்தை சர்வவியாபி என்றால் தாய் எங்கே சென்றார்? இது புரிந்து கொள்ள வேண்டிய விசயம் இல்லையா? தாய்-தந்தை வேண்டும் இல்லையா? நிராகார் தான் தாய்-தந்தை எனச் சொல்லப் படுகிறார். ஆனால் இவர் ஏன் தாய்-தந்தை எனச் சொல்லப் படுகிறார் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவரோ இறைத்தந்தை (காட் ஃபாதர்). பிறகு ஆதாம்-ஏவாள் (ஆடம்-ஈவ்) எனச் சொல்கின்றனர். ஆதாம் தான் ஏவாள் -- இதைப் புரிந்து கொள்வதில்லை. பிரஜாபிதா பிரம்மா, பிறகு அவரே தான் தாயும் ஆகிறார். ஆடம் மற்றும் ஈவ் அல்லது ஆதம்-பீபி எனச் சொல்கின்றனர். ஆனால் அவர்களால் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. குழந்தைகள் புரிந்து கொண்டுள்ளனர், ஆதம்-பீபி உண்மையில் இவர் தான். பீபி தான் பிறகு ஆதாமும் ஆவார். இவருக்கு பீபி-ஆதம் என்று இரண்டும் சொல்கின்றனர். அவரோ தந்தை. இவை புரிந்து கொள்வதற்குக் கடினமான விசயங்கள். பாரதத்தில் பாடவும் செய்கின்றனர் -- நீங்கள் தான் தாயும் தந்தையும்..... இது போல், தான் கேள்விப்பட்டதை அப்படியே பாடி விடுகின்றனர். அர்த்தம் எதுவும் புரிந்து கொள்வ தில்லை.

சத்யுகத்தை அதிக தூரம் (கால இடைவெளி) கொண்டு சென்று விட்டனர். இலட்சக்கணக்கான வருடங்கள் எனச் சொல்லி விட்டனர். லாங்-லாங் (மிக நீண்ட காலம்) என்பதும் எத்தனை ஆண்டுகள்? கதையோ சமீபத்தினுடையதை தான் சொல்லப் படுகின்றது. நீங்கள் புரிய வைக்க முடியும் -- லாங்-லாங் எகோ அல்லது 5000 ஆண்டுகளுக்கு முன் இந்த பாரதத்தில் தேவி-தேவதைகளின் பிளவுபடாத, அசையாத, சுகம்-சாந்திமயமான இராஜ்யம் இருந்தது. அப்போது வேறு எந்த ஓர் இராஜ்யமும் இல்லை. இந்த வார்த்தையை எந்த ஒரு வித்துவான், ஆச்சாரியாரும் சொல்ல முடியாது. தேவி-தேவதைகளின் இராஜ்யம் இருந்தது, அது எப்படி ஸ்தாபனை ஆயிற்று என்பது தெரிந்திருக்க வேண்டும். லட்சுமி-நாராயணனாக எப்படி உருவானார்கள்? எப்படி அவர்களின் இராஜ்யம் ஸ்தாபனை ஆயிற்று? அவர்களுக்கு முன்போ கலியுகம் இருந்தது. நிச்சயமாகக் கலியுகத்தின் கடைசி இப்போது தான். கலியுகத்திற்குப் பிறகு சத்யுகம் வரும். சத்யுகம் முன்னால் வந்து விட்டது. எது லாங்-லாங் ஆக இருந்ததோ அது முன்னால் வந்து விட்டது. 84 பிறவிகள் எடுத்து-எடுத்தே

இப்போது கலியுகத்தின் கடைசி வந்து விட்டுள்ளது. இப்போது உங்களுக்குச் சொல்லப்படுகிறது, 5000 ஆண்டு களுக்கு முன்பு சத்யுகத்தில் இந்த லட்சுமி-நாராயணரின் இராஜ்யம் இருந்தது. இப்போது அது இல்லை. இப்போது அந்த நேரம் முடிவடைந்தது. மீண்டும் லட்சுமி-நாராயணரின் இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக் கிறது. இது உங்களது புத்தியில் உள்ளது. அதற்காக நீங்கள் இப்போது புருஷார்த்தம் செய்து கொண்டி ருக்கிறீர்கள். இது தான் புரிய வைக்க வேண்டிய விஷயம். இந்த உண்மையான கீதை முதலியவை, படித்துப் புத்துணர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக எழுதப் படுகின்றன. எது எழுதப் படுகின்றதோ, அது பிறகு மறைந்து போகும் என்பதை அறிந்திருக்கிறீர்கள். இந்த உண்மையான கீதையும் கூட மிஞ்சி யிருக்காது. எதை நீங்கள் எழுதுகிறீர்களோ, அந்த உண்மையான ஞானம் மறைந்து போகப் போகிறது. மேலும் அதனுடன் கூடவே சாஸ்திரங்கள் அனைத்தும் கூட மறைந்து போகும். சத்யுக-திரேதாவில் சாஸ்திரங்கள் இருப்பதில்லை. பிறகு கல்பத்திற்கு முன் எப்படி துவாபரயுகத்திலிருந்து உருவாயினவோ, அதே போல் உருவாகத் தொடங்கும். இவை பக்தி மார்க்கத்தின் சாதனங்கள். படைப்பின் சாதனங்கள் மிகப் பெரியவை. நீங்கள் ஞானத்தை ஒரு விநாடியில் பெற்றுக் கொள்கிறீர்கள். முழுப் படைப்பின் முதல்-இடை-கடை பற்றி நீங்கள் அறிவீர்கள். தேதி- கிழமையுடன் கூடவே முழுமையான கணக்கு-வழக்கு உள்ளது. 84 பிறவிகளை அனைவருமே எடுப்பதில்லை. சிலர் 70 பிறவிகள் எடுப்பார்கள், சிலர் 60 எடுப்பார்கள். இன்னும் சிலர் 2 பிறவிகள் கூட எடுப்பார்கள். அவை யனைத்தும் குறைந்த பட்சம் மற்றும் அதிக பட்சத்தின் கணக்காகும். பின்னால் வருபவர்களுக்கு நிச்சயமாக நம்பர்வார் குறைவான அளவே பிறவிகள் இருக்கும். அதைப் பிறகு விஸ்தாரமாக்குவது தவறாகி விடுகிறது. குழந்தைகள் நீங்கள் சுருக்கமாகப் புரிந்து கொள்ள முடியும். 84 லட்சம் பிறவிகள் என்பதோ கிடையாது. 84 பிறவிகளும் கூட ஒவ்வொருவரும் எடுக்க முடியாது. 84 பிறவிச் சக்கரம் என்று அப்படியே சும்மா சொல்லி விடுகின்றனர். 84 லட்சம் பிறவிகளின் சக்கரம் எனப் பாடப் படுவதில்லை. (பாடல்) பாவம், கபடத்தின் நிழல் படிந்துள்ளது. இப்போது இராவணனின் இராஜ்யம் அல்லவா? ஆத்மா மீது அழுக்கின் நிழல் படிந்து-படிந்தே இப்போது முற்றிலும் அஜாமில் ஆகி விட்டுள்ளனர். அவ்வளவு அழுக்கு ஏறி விட்டுள்ளது, அது தூய்மையாவதே இல்லை. அந்த அழுக்கை நீக்குவதற்காக ஞான மானசரோவர் எனப் பாடப்பட்டுள்ளது, அதில் மூழ்கிக் கொண்டே இருக்க வேண்டும். எப்படி துருப் பிடிக்கிறது என்றால் அதை நீக்குவதற்காக மண்ணெண்ணெயில் போடப் படுகிறது. இதுவும் துருப்பிடித்துள்ளது, அதனால் ஞானக்கடலில் மூழ்கிக் கொண்டே இருங்கள். எந்த ஒரு தண்ணீரின் நதி அல்லது கடலின் விசயம் என்பது கிடையாது. ஞானக்கடல் வந்து என்ன ஞானம் தருகிறாரோ, அதில் மட்டுமே ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும். இல்லற விவகாரங்களையும் பராமரிக்க வேண்டும். அதில் ஏதாவது அறிவுரை வேண்டும் என்றால் கேட்டுப் பெற்றுக் கொண்டே இருங்கள். ஒவ்வொருவரின் கர்ம பந்தனமும் அவரவருடையது. டாக்டர் அனைவர்க்கும் ஒரே மருந்தைத் தர மாட்டார். ஒவ்வொருவரின் கர்ம பந்தனம், ஒவ்வொருவரின் நோய் அவரவருடையது. இந்த 5 விகாரங்களின் நோய் மிகப்பெரியதாகும். இந்த நோயை யாரும் அறிந்து கொள்ளவே இல்லை. இது எப்போதிருந்து ஆரம்பமாகின்றது? ஆத்மாவுக்கு நோய் வருவதால் சரீரத்திற்கும் நோய் வந்து விடுகிறது. ஆத்மாவில் துக்கம் ஏற்படுகிறது என்றால் சரீரத்திலும் ஏற்படுகிறது. இந்த விசயங்கள்

சாஸ்திரங்களில் கிடையாது. அதுவோ பக்தி மார்க்கத்தின் பக்தி காண்டமாகும். (ஒரு பகுதி) பக்தி பற்றியும் பாபா சொல்லியிருக்கிறார், அதாவது முதலில் கலப்படமற்ற, ஒருவரை வணங்கும் பக்தியாக இருக்கும். பிறகு ரஜோகுணி -- பல உருவங்களை வணங்கும் கலப்பட பக்தியாக ஆகும். அதன் பிறகு கலப்பட தமோகுணி பக்தி. எப்படி-எப்படி பக்தர்களின் மனநிலை இருக்குமோ, அப்படியே பக்தியும் ஆகி விடுகிறது. ஞானமும் கூட அப்படியே இறங்குகிறது. முதலில் 16 கலைகள், பிறகு 14 கலைகள், அதன் பிறகு 12 கலைகள்....... என்ன பலனை அடைகின்றனரோ, அது பிறகு குறைந்து கொண்டே செல்கிறது. குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், இது வருமானமாகும். வருமானத்தில் தடைகள் வருகின்றன. தசாக்கள் (கிரகப் பலன்) மாறுகின்றன. எங்கள் மீது என்ன தசா அமர்ந்துள்ளது எனக் கேட்கின்றனர். பிறகு அவர்கள் (சோதிடர்கள்) சொல்கின்றனர். இந்த உண்மையான வருமானத்திலும் குழந்தைகள் மீது கெட்டதசா (கிரகம்) அமர்கின்றன. சிலர் மீது இராகுவின் தசா அமர்கின்றது. அப்போது முகத்தைக் கருப்பாக்கிக் கொள்கின்றனர். பிரகஸ்பதியின் தசா இருந்தது. பிறகு மாயா அடி கொடுத்தது என்றால் இராகுவின் தசா அமர்ந்து விட்டது. காமவிகாரத்தில் வீழ்ந்தனர் என்றால் உடனே இராகுவின் கிரகணம் பிடித்து விட்டது. (புத்தியின்) பூட்டு பூட்டப்பட்டு விடுகிறது. இது குப்தமான கடும் தண்டனையாகும். அவர்கள் பிறகு பகவான் சொல்கிறார், காமம் மகாசத்ரு என்று ஒரு போதும் சொல்ல முடியாது. சந்நியாசிகளும் கூட காமம் என்ற மகாசத்ருவின் காணத்தால் தான் மனைவியைப் பிரிந்து சென்று விடுகின்றனர். இந்தத் துறவற மார்க்கத்தின் பவித்திரதா பாரதவாசி களுக்கு நல்லது தான். பாரதவாசிகள் தான் தூய்மையாக இருப்பதி-ருந்து தூய்மை இழந்து விடுகின்றனர் என்றால் அவர்களை மீண்டும் தூய்மையாக்க இந்த சந்நியாசிகள் உதவியாக உள்ளனர். மராமத்துக்காக (குறைகளை சரிசெய்ய) இந்தப் தூய்மை சக்தி உள்ளது. தூய்மையின் சக்தியால் தான் சிருஷ்டி இந்த அளவு நடைபெறுகிறது. இப்போதோ அவர்களும் கூட தூய்மை இழந்து விட்டுள்ளனர். நீங்கள் அவர்களுக்கும் சேவை செய்ய வேண்டும். சேவை செய்வதில் குழந்தைகளாகிய உங்களுக்கு அதிக ஆர்வம் இருக்க வேண்டும்.

விதிமுறைக்குப் புறம்பான எந்த ஒரு நடத்தையும் இருக்கக் கூடாது. நீங்கள் புரு^ôர்த்திகள் தான் என்றாலும் யாரும் இன்னும் சம்பூர்ணமாக ஆகவில்லை. ஏதாவது பாவங்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. பாபாவின் கட்டளையை ஏற்று நடக்கவில்லை என்றால் இதுவும் கூடப் பெரிய பாவமாகும். பாபாவின் கட்டளையாவது, நிரந்தரமாக என்னை நினைவு செய்யுங்கள் என்பதாகும். செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் முழுமையான புருஷார்த்தமே செய்வ தில்லை. யார் செய்கின்றனரோ, அவர்கள் நல்ல பதவி பெறுவார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்கு தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) 5 விகாரங்களின் நோயிலிருந்து விடுபடுவதற்காக சர்ஜனின் (பாபாவின்) அறிவுரை பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். ஆத்மாவுக்கு எந்த ஒரு

நோயும் வராதவாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

2) உண்மையான வருமானம் சம்பாதிக்கவும், மற்றவர்களைச் சம்பாதிக்க வைக்கவும் வேண்டும். விதிமுறைக்குப் புறம்பான எந்த ஒரு நடத்தையும் இருக்கக் கூடாது. இராகுவின் தசா ஒரு போதும் அமர்ந்து விடக் கூடாது, இதற்காக பாபாவின் கட்டளைப்படி சதா நடக்க வேண்டும்.

வரதானம் : நினைவு மற்றும் சேவை மூலம் அனைத்துச் சக்கரங்களையும் முடித்து விட்டு, ஜோதியில் பலியாகக் கூடிய உண்மையான விட்டில் பூச்சி ஆகுக.

எந்தக் குழந்தைகள் நினைவு மற்றும் சேவையில் சதா பிஸியாக இருக்கிறார்களோ, அவர்கள் அனைத்துச் சக்கரங்களில் (கஷ்டங்கள்) இருந்தும் விடுபட்டு விடுவார்கள். எந்த ஒரு சக்கரமாவது முடிவுறாமல் மிஞ்சியிருக்குமானால் சுற்றி அலைந்து கொண்டே இருப்பார்கள். புத்தியில் ஜோதி யாகிய பாபா தவிர வேறு எதுவும் இல்லாத போது தான் -- சில நேரம் சம்பந்தங்களின் சக்கரம், சில நேரம் தன் சுபாவ-சம்ஸ்காரங்களின் சக்கரம் என்ற இவை அனைத்தும் முடிவுக்கு வரும். ஜோதியில் பலியாகக் கூடியவர்கள் ஜோதிக்கு சமமாக ஆகி விடுவார்கள். அவ்வாறு பலியாகிறவர்கள், அதாவது --கலந்து விடுகிறவர்கள் தாம் உண்மையான விட்டில் பூச்சிகள் ஆவார்கள்.

சுலோகன்: ஸ்லோகன்: யார் உண்மையான பாரஸ் (தங்கம்) ஆகிறார்களோ, அவர்களின் சகவாசத்தில் (தொடர்பில்) வருபவர்கள், இரும்பைப் போன்ற ஆத்மாவாக இருந்தாலும் தங்கமாக ஆகி விடுவார்கள்.